ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2238/33 - 2021 ජූලි මස 30 වැනි සිකුරාදා - 2021.07.30
*2238/33 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*8 ஆவது திருத்தம்*

**இலங்கை தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு**

*கீழே பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி திருத்தப்பட்ட 2013, நவெம்பர் 19 ஆந் திகதிய இலக்கம் 1837/ 8 எனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழே பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீண்டும் திருத்தப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் உள்ளன.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

வைத்தியர் எஸ். எச் முனசிங்க,
செயலாளர்,
சுகாதாரஅமைச்சு.

*2021, யூலை 29.*

**பகுதி I**

திருத்தம் இலக்கம் 1 - 2014, செத்தெம்பர் 23 ஆந் திகதிய இலக்கம் 1881/14 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்தம் இலக்கம் 2 - 2016, மே11 ஆந் திகதிய இலக்கம் 1966/23 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்தம் இலக்கம் 3 - 2016, செத்தெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் 1986/10 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்தம் இலக்கம் 4 - 2017, யூன் 07 ஆந் திகதிய இலக்கம் 2022/18 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்தம் இலக்கம் 5 - 2018, ஓகத்து 27 ஆந் திகதிய இலக்கம் 2086/3 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்தம் இலக்கம் 6 - 2018, செத்தெம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் 2087/75 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்தம் இலக்கம் 7 - 2020, பெப்புருவரி 25 ஆந் திகதிய இலக்கம் 2164/13 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்

## பகுதி II

### 11.2 தெரிவுசெய்யும் முறைமை

(அ) (1) I ஆம் தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிகளுக்கு நியமித்தல்
நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 35% இனை நிரப்புவதற்கு II தரத்தின், I ஆம் தரத்தின் மற்றும் சிறப்பு தரத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களில் 11.1 (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா கற்கைநெறியை தொடர்வதற்காக தேர்ந்தெடுப்பதற்கு எழுத்துமூல பரீட்சையொன்று நடாத்தப்படும். பரீட்சையின் பாட பரிந்துரைகள் உப அட்டவணை iv இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) கிட்டிய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இன்படி ஒழுக்காற்றுத் தண்டனைஅற்றவராக இருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயற்திறன் மதிப்பீட்டுத் திட்டத்தின் பிரகாரம் பதவியுயர்வுத் திகதிக்கு முன்னைய ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்ட செயற்திறனையோ அல்லது அதனைவிட மேலான செயற்திறனையோ காட்டியிருத்தல் வேண்டும்.

(iv) 48 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

எஞ்சிய 65% வெற்றிடங்களின் அளவினைப் பூர்த்தி செய்வதற்கு தரம் II இல், தரம் I இல் மற்றும் சிறப்பு தரத்தில் உள்ள பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கிடையே சுகாதார செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபை ஒன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு அதில் தேர்ச்சிபெறும் உத்தியோகத்தர்களில் இருந்து சேவை மூப்பு, திறமை, தகுதி, வேலை மற்றும் நடத்தை ஆகியவற்றின் அடிப்படையில் மேலே 11.1 (அ) (ii) இல் குறிப்பிட்டுள்ள டிப்ளோமா கற்கைநெறிக்காக தெரிவுசெய்யப்படுவார்கள். உப அட்டவணை v இல் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) கிட்டிய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/ 2020 இன்படி ஒழுக்காற்றுத் தண்டனை அற்றவராக இருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயற்திறன் மதிப்பீட்டுத் திட்டத்தின் பிரகாரம் பதவியுயர்வுத் திகதிக்கு முன்னைய ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்ட செயற்திறனையோ அல்லது அதனைவிட மேலான செயற்திறனையோ காட்டியிருத்தல் வேண்டும்.

(iv) 52 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

#### மாவட்ட திறமை வரிசைப்படி தேர்ந்தெடுக்கும் முறை

i. ஒவ்வொரு மாவட்டத்தின் கீழும் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறமை ரீதியிலும் ஒதுக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை மற்றும் அந்த மாவட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பன விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்வாங்கப்பட்டு வெளியிடப்படும்.

ii. தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு துறையின்கீழ் அதிகபட்சம் 03 மாவட்டங்களுக்கு தமது விருப்பத்திற்கு அமைய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். (இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவுகள் வழங்குவது கட்டாயமில்லை) அம்மாவட்டம் பின்னர் மாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

iii. ஒரு மாவட்டத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகளின் திறமை வரிசைக்கு அமைய அந்த மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையில் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறமை அடிப்படையில் டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.

iv. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு திறமை ரீதியில் ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெற்றிடங்களுக்கு தகுதியான உத்தியோகத்தர் இல்லாத சந்தர்ப்பத்தில் அந்த வெற்றிட எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் நிரப்பப்படும்.

v. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெற்றிடங்களுக்கு தகுதியான உத்தியோகத்தர் இல்லாத சந்தர்ப்பத்தில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை திறமை ரீதியில் நிரப்பப்படும்.

vi. மேலே தொடர் இலக்கம் iv மற்றும் v இன்படி நிரப்ப முடியாதவிடத்து ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மட்டுப்படுத்தப்பட்ட துறையின் கீழ் பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய உத்தியோகத்தர்களின் திறமை வரிசை மற்றும் விருப்பத் தெரிவு ஆகியவற்றுக்கு அமைய நிரப்பப்படுவார்கள். அதன்படி விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் பணியாற்ற விரும்பும் பிற மாவட்டங்கள் 03 இற்காக விருப்பம் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

vii. 1 ½ வருட பயிற்சியை நிறைவுசெய்த உத்தியோகத்தர்களுக்கு வாட்டு முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு (12 மாதங்கள்) பயிற்சியின் நிறைவில் நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ரீதியில் திறமை பட்டியல் தயாரிக்கப்படும். அந்த திறமை பட்டியலை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகத்தர்கள் சுகாதார செயலாளரினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் ஊடாக பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு 11.1.(அ) இன் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளாரா என்பது பற்றி பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் இருப்பதாக பரிந்துரைக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைய திறமை பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, I ஆம் தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கான நியமனம் வழங்கப்படும்.

**தேர்ந்தெடுக்கும் முறை**

எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த மட்டுப்படுத்தப்பட்ட ரீதியிலான விண்ணப்பதாரிகளில் இருந்தும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் திறமை வரிசைக்கு அமைய திறமை அடிப்படையின் கீழ் உள்ள விண்ணப்பதாரிகளில் இருந்தும் திறமை வரிசையின்படி நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினர் டிப்ளோமா கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

**குறிப்பு**

(01) I ஆம் தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவியில் ஏற்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வருடத்திற்கு ஒரு முறை எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(02) 11.1. (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பயிற்சியை ஆரம்பிக்க முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒரு ஒப்பந்தம் எட்டப்படல் வேண்டும்.

11.1. (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர் பயிற்சியின் பின்னர் மேலே 11.1.(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் உரிய பதவியில் சேவைக்கு அறிக்கையிடல் வேண்டும். அவ்வாறு பதவியை ஏற்காத உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்யாத உத்தியோகத்தர்கள் ஒப்பந்த தொகையை செலுத்த வேண்டும் என்பதுடன் அவர் முன்பு வகித்த பதவிக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

**உப அட்டவணை V**

| சேவை மூப்பு | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|
| சிறப்புத் தரத்தின் சேவைக்காலத்திற்கு - வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்<br>I ஆம் தரத்தின் சேவைக் காலத்திற்கு - வருடத்திற்கு 04 புள்ளிகள் வீதம்<br>II ஆம் தரத்தின் சேவைக் காலத்திற்கு - வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம்<br>(அதிகூடிய புள்ளிகள் 80 இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | 80 |

| திறமை | | | அதிகூடிய புள்ளிகள் 20 |
|---|---|---|---|
| (i) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றுக்கு | புள்ளிகள் 05 | |
| (ii) | சுகாதார செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து விடயத் துறைக்கு உரித்தாக பெற்றுக்கொண்ட டிப்ளோமா (06 மாதத்திற்கு அல்லது 720 மணித்தியாலங்களுக்கு குறையாத)<br>கவனத்திற் கொள்ள வேண்டியவை:<br>இதன் போது மருத்துவச்சி பயிற்சி சான்றிதழுக்கு அல்லது உளநல தாதியியல் பயிற்சி சான்றிதழுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. | புள்ளிகள் 03 | |
| (iii) | சிறப்பு செயற்பாடுகள்<br>புள்ளிகள் வழங்கப்படும் சிறப்பு செயற்பாடுகள் பின்வருமாறு<br>1. விடயம்சார் ஆய்வுகள், ஆய்வுகட்டுரைகள் மற்றும் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு வழங்கியுள்ள ஆக்கங்கள் (அதிகபட்சம் 02 புள்ளிகள்)<br>2. பயிற்சித் திட்டங்களை நெறிப்படுத்தல் /ஒருங்கிணைத்தல் (அதிக பட்சம் 02 புள்ளிகள்)<br>3. பயிற்சிப் பட்டறைகள் /மாநாடுகளில் (உள்நாட்டு/சர்வதேச) பங்கேற்பு (அதிகபட்சம் 02 புள்ளிகள்)<br>4. பாராட்டுகள் (பொது 230 B படிவத்திற்கு அமைவான பராட்டுகளுக்கு மட்டும்) (அதிகபட்சம் 02 புள்ளிகள்)<br>5. சிறப்புப் பணிகள் செய்திருத்தல் -இயற்கை/அவசர/பயங்கரவாத இடர்களின் போது சிறப்பு பணிகள் செய்திருத்தல் (அதிகபட்சம் 01 புள்ளி)<br>6. தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் தொடர்பான அறிவு (அதிகபட்சம் 02 புள்ளிகள்)<br>7. சிங்களம் /தமிழ் மொழி தொடர்பான திறமை (சிங்கள மொழியில் சேவையில் இணைந்தவர்களுக்கு தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியில் சேவையில் இணைந்தவர்களுக்கு சிங்கள மொழிக்கும் புள்ளிகள் வழங்கப்படும். (அதிகபட்சம் 01 புள்ளி)<br>(ஒருசான்றிதழுக்கு/ஆவணத்திற்கு/பாராட்டுக்கு 01 புள்ளிவீதம் வழங்கப்படும். | புள்ளிகள் 12 | |
| | மொத்தம் | | புள்ளிகள் 100 |

08-130